1969 செப்டம்பர் 13]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, considering the salubrous and beautiful climate of the Hosur taluk—the entire taluk is an air-conditioned taluk—I have suggested that Honnagurki is an ideal place which has got natural beauty and historical importance as also water facilities, railway station facilities and nearness to Bangalore, which is an international city. In the previous century, the Europian Generals who went to the distant war-fields came to this place for taking rest. Also European Collectors used to hold *jamabandhi* and also attend to administrative work there. Considering all these things, will the Hon. Minister be pleased to sanction a "Health-*cum*-Tourist Centre" there?

THE HON. THIRU M. MUTHUSWAMY: The Collector who was consulted in the matter has reported that there is no sufficient space in this village for this purpose. Further, he has also stated that this place does not have any tourist importance. Therefore the District Development Council, Dharmapuri, at its meeting held on 20–9–1968, did not resolve to recommend this proposal to the Government for sanction.

THIRU K. S. KOTHANDARAMIAH: The 'contention' of the Collector as read out by the Hon. Minister is in conflict with the existing conditions. So I request the Hon. Minister to refer the matter to the Collector of the district for further clarification?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1968 செப்டம்பர் மாதத்திலிருந்து 1969 செப்டம்பருக்குள்ளாக நிலைமை இவ்வளவு பெரிய மாற்றம் அடைந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

மின் கம்பங்கள் உற்பத்தி

*301 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம்**: மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைக்குப் பக்கத்தில் செர்மானிய நிறுவனம் ஒன்றின் உதவியோடு மின் கம்பங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க விருக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் வாழ்வதாகச் சொல்லிக் கொண்டு கர்னல் ராமன் என்ற பெயர் புனைந்த ஒருவர் சென்னைக்குப் பக்கத்தில் செர்மானிய நிறுவனம் ஒன்றின் உதவியோடு மின் கம்பங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு அனுமதித்துள்ளது என்று சொல்லிக் கொண்டு பங்குத் தொகை சேர்த்து வருவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதுபற்றித் தெரியாது.

திரு. தி. பொன்னுமலை : தற்போது மின் கம்பங்களுக்கு நிறைய கிராக்கி இருக்கிறது. ஆகவே தாலுகாவிற்கு ஓர் இடத்தில் தனி யார் துறையில் மின் கம்பங்கள் தயாரிப்பதற்கு அனுமதி வழங்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தாலுகாவிற்கு ஓர் இடத்தில் என்று இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு 16,50,000 மின் கம்பங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. இப்போது நம் மின்சார வாரியத் தின் மூலமாகவே பல கம்பங்கள் செய்து வருகிறார்கள். தனியார் காண்ட்ராக்ட் மூலம் செய்து வருகிறார்கள். அவற்றைத் தயாரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு தாலுகாவிற்கும் எவ் வளவு என்று பிரித்து கொடுக்கலாமோ அதைச் செய்யலாம்.

Workers in State Undertakings

* 302 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is proposed to bring the workers in State Undertakings under the purview of the Workmen's Compensation Act ;

(b) whether the views of the Heads of Departments have been obtained in the matter ; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) 1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தில் விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளபடி தொழிலாளர் எவரேனும் காயமுற்றால் அவர் வேலை செய்து வந்த நிறுவனம், பொது நிறுவனமாயிருந்தாலும் சரி அல்லது தனியார் நிறுவனமாயிருந்தாலும் சரி மேற்படி சட்டத் தின் விதித்துறைகள் அவருக்குப் பொருந்தும்.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இது விஷயமாக அரசாங்கத் தொழில் ஸ்தாபனமாகட்டும் அல்லது தனி யார் தொழில் ஸ்தாபனமாகட்டும் எல்லோருக்கும் ஒருவிதமான சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது பற்றிப் பாராட்டுகிறேன். இது மாதிரி தொழிலாளர்களுக்குள்ள உரிமைகள் எல்லாம் இந்த இரண்டு ஸ்தாபனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் மேலும் அமலுக்குக் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : அப்படித்தான் அமல் செய்யப்படுகிறது.